# சமூகம் சார்ந்த பேரிடர் மேலாண்மை

(கடலோர சமூகத்தினரின் மக்கள் கருத்தரங்கம்)

## மதுரை கூடலரங்கம் 2007

26 செப்டம்பர் 2007
தமுக்கம் மைதானம், மதுரை





## அன்புடையீர்

மனித இனம் தொன்று தொட்டு இயற்கையோடு இயைந்து வாழும் கலையை கற்று வந்துள்ளது. இயற்கையானது மனித இனத்திற்கு தேவையான அனைத்தையும் வழங்கி வரும் ஒரு அற்புத விசயம். அதே நேரத்தில் இயற்கைச் சீற்றங்களால் மனித குலத்திற்கு பேரழிவு ஏற்பட்டு வரும் நிலையையும் நாம் அறிந்திருக்கிறோம். ஆக, மனித இனமானது எப்போதெல்லாம் இயற்கையோடு இணக்கமாக வாழும் கலையை முறையாக கையாண்டதோ, அப்போதெல்லாம் நன்மைகளையும், இயற்கைக்கு முரண்பட்ட வாழ்க்கைமுறையை கையாண்ட போது அதன் சீற்றங்களையும் சந்திக்க வேண்டிய நிலையிலும் உள்ளது. ஆக மனிதன் இயற்கையை பயன்படுத்துவதையும், அது சீற்றங்கொள்ளும் காலத்தில் அதை சமாளிக்கும் யுக்தியையும் கையாண்டு வந்துள்ளான். இந்த இயற்கை சீற்றங்கள் பேரிடர் எனப்படுகிறது.

பல்வேறு வகைப்பட்ட பேரிடர்களை நாம் அறிவோம். அவைகளில், புயல், வெள்ளம், நிலநடுக்கம், சுனாமி மற்றும் பஞ்சம் ஆகிய பேரிடர்கள் நாம் அவ்வபோது சந்திப்பவை ஆகும். இந்தப் பேரிடர்கள் இந்திய தேசத்தில் பல்வேறு கால கட்டங்களில், பல்வேறு வகையான பேரழிவை ஏற்படுத்தி வந்துள்ளன. பேரிடர் காலங்களில் உயிர்சேதம், பொருள்சேதம், சொத்து சேதம், வாழ்வாதாரம் அழிவு, பசி, பட்டினி என அப்பகுதி வாழ் மக்களையே நிலை குலைய செய்து விடுகிறது. இது போன்ற பேரிடர்களில் பாதிக்கப்படுவது பெரிதும் முன்னேற்றமடையாத ஏழைச்சமூகமே. பேரிடர்களைச் சமாளிக்கும் விதமாக பல்வேறு யுக்திகளையும், நிர்வாகங்களையும் இந்த சமூகம் காலங்காலமாகக் செய்து வந்துள்ளது. நமது தேசத்திலும் பேரிடர் மேலாண்மை என்பது காலங்காலமாக சமூகத்தால் கையாளப்பட்டு வந்துள்ளது. அதன் மூலம் தன்னையும் தங்கள் சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்ளும் யுக்திகளையும் கற்றுக் கொண்டுள்ள போதிலும், இப்பேரிடர்களால் நினைத்துப் பார்க்க இயலாத அளவு பாதிப்புக்களையும் சவால்களையும் அவர்கள் சந்தித்து வந்துள்ளனர்.

இந்தியாவில் அண்மையில் ஏற்பட்ட குஜராத் பூகம்பம், பீகார் வெள்ளம், தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமி போன்ற பேரிடர்கள் ஒரு உதாரணம். டிசம்பர் 2004ல் ஏற்பட்ட சுனாமி பேரிடரானது தமிழகத்தில் கடல் சார்ந்து வாழும் சமூகத்தினரிடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதோடு போதிய விழிப்புணர்வையும் ஏற்படுத்திவிட்டுச்

சென்றுள்ளது. அரசுகளும் இது விசயத்தில் விழிப்பாக இருக்கக் கற்றுக் கொண்டுள்ளனர். சமூக இயக்கங்களும் தங்களுக்கு இதில் பெரும் கடமையிருப்பதாக உணரத் தொடங்கியுள்ளன. இந்த தருணத்தில் கடலோர சமூகத்தினரிடையே பேரிடர் சம்பந்தமான சரியானதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்களிடையே இது சம்பந்தமாக உள்ள நல்ல அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் சிறப்பான பேரிடர் மேலாண்மை யுக்திகளை வகுத்துக் கொள்ளவும் தானம் அறக்கட்டளை ஏற்பாடு செய்து இருக்கும் மதுரை கூடலரங்கம் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் தந்துள்ளது.

மதுரை கூடலரங்கத்தின் ஒரு பகுதியாக வரும் 26.9.07 புதன் கிழமை மதுரை தமுக்கம் மைதானத்தில் **"சமூகம் சார்ந்த பேரிடர் மேலாண்மை"** என்னும் தலைப்பில் கடலோர சமூகத்தினர் பங்கு கொள்ளும் மக்கள் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கில் தமிழகக் கடலோரத்தில் வாழும் மீனவ சமூகத்தினர் மற்றும் விவசாயிகள் என சுமார் 200 பேர் பங்கு கொள்ள இருக்கின்றனர். இக்கருத்தரங்கில் கீழ்காணும் தலைப்புகளில் போதிய அளவு விவாதம் நடத்தி முடிவு எடுக்க உள்ளனர்

- நாம் சந்தித்து வரும் முக்கிய பேரிடர்கள் மற்றும் அதன் பாதிப்புகள்
- சமூகம் சார்ந்த பேரிடர் மேலாண்மை அன்றும் இன்றும்
- பேரிடர் நிர்வாகத்தில் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பங்கு மற்றும் பணிகள்
- பேரிடர் மேலாண்மையில் நடைமுறையில் உள்ள சிறப்புச் செயல்கள்

இந்த ஒரு நாள் கருத்தரங்கத்தின் இறுதியில் கடலோர சமூகத்தின் பேரிடர் மேலாண்மை சம்பந்தமான முக்கியத் தீர்மானங்களை இயற்றவும் எதிர்கால செயல்திட்டம் வகுக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த கருத்தரங்கில் கருத்துரையாற்றவும் கருத்தரங்கை வழி நடத்தவும் அனுபவம் வாய்ந்த கருத்தாளர்கள் பங்கேற்கின்றனர்

இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தங்களை அன்போடு அழைக்கிறோம்!

## நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 09.00-10.00 | - | பங்கேற்பாளர்கள் பதிவு செய்து கொள்ளுதல் |
| 10.00-10.15 | - | இறைவணக்கம் |
| 10.15-10.30 | - | வரவேற்புரை |
| 10.30-10.45 | - | குத்து விளக்கேற்றல்-கருத்தரங்கம் தொடங்குதல் |
| 10.45-11.30 | - | பேரிடர் நிர்வாகம் பற்றிய முன்னோடி அறிக்கை சமர்ப்பித்தல் |
| 01.45-01.30 | - | சிறு குழு கலந்துரையாடல் |
| 01.30-02.30 | - | மதிய உணவு இடைவேளை |
| 02.30-03.30 | - | சிறு குழு கலந்துரையாடல் (தொடர்தல்) |
| 03.30-04.30 | - | சிறு குழு விவாத கருத்துக்களை தொகுத்து வழங்குதல் |
| 04.30-05.00 | - | கருத்தரங்க தீர்மானங்களை தொகுத்து வழங்குதல் |
| 05.00-05.15 | - | கருத்தாளர் தொகுப்புரை |
| 05.15-05.30 | - | நன்றியுரை / நாட்டுப்பண் |

*மேலும் விபரங்களுக்கு*

**திரு. பெ. ராஜன்**
தானம் அறக்கட்டளை
18, பிள்ளையார் கோவில் தெரு
சோமசுந்தரம் (எஸ்.எஸ்) காலனி, மதுரை - 625 016.
தொ.பே.எண்: 0452 - 2610805 / 2610794
செல்: 94434 65499